**85/26-T**

**Question Booklet Alpha Code**

**A**

**A**

| Question Booklet Sl. No. |
|---|
| |

**Total Number of Questions : 100** **Time : 90 Minutes**

**Maximum Marks : 100**

## INSTRUCTIONS TO CANDIDATES

1. The Question Paper will be given in the form of a Question Booklet. There will be four versions of Question Booklets with Question Booklet Alpha Code viz. **A, B, C** & **D**.
2. The Question Booklet Alpha Code will be printed on the top left margin of the facing sheet of the Question Booklet.
3. The Question Booklet Alpha Code allotted to you will be noted in your seating position in the Examination Hall.
4. If you get a Question Booklet where the alpha code does not match to the allotted alpha code in the seating position, please draw the attention of the Invigilator IMMEDIATELY.
5. The Question Booklet Serial Number is printed on the top right margin of the facing sheet. If your Question Booklet is un-numbered, please get it replaced by new Question Booklet with same alpha code.
6. The Question Booklet will be sealed at the middle of the right margin. Candidate should not open the Question Booklet, until the indication is given to start answering.
7. Immediately after the commencement of the examination, the candidate should check that the Question Booklet supplied to him/her contains all the 100 questions in serial order. The Question Booklet does not have unprinted or torn or missing pages and if so he/she should bring it to the notice of the Invigilator and get it replaced by a complete booklet with same alpha code. This is most important.
8. A blank sheet of paper is attached to the Question Booklet. This may be used for rough work.
9. **Please read carefully all the instructions on the reverse of the Answer Sheet before marking your answers.**
10. Each question is provided with four choices **(A), (B), (C)** and **(D)** having one correct answer. Choose the correct answer and darken the bubble corresponding to the question number using Blue or Black Ball Point Pen in the OMR Answer Sheet.
11. **Each correct answer carries 1 mark and for each wrong answer 1/3 mark will be deducted. No negative mark for unattended questions.**
12. No candidate will be allowed to leave the examination hall till the end of the session and without handing over his/her Answer Sheet to the Invigilator. Candidates should ensure that the Invigilator has verified all the entries in the Register Number Coding Sheet and that the Invigilator has affixed his/her signature in the space provided.
13. Strict compliance of instructions is essential. Any malpractice or attempt to commit any kind of malpractice in the Examination will result in the disqualification of the candidate.

A

1. நவீன திருவிதாங்கூரின் நிறுவனர் யார் ?
   A) பழசி ராஜா
   B) மார்த்தாண்ட வர்மா
   C) சக்தன் தம்புரான்
   D) பாலியத்தச்சன்

2. ‘சமத்துவ சமாஜம்’ (Equality Society) அமைப்பை நிறுவியவர் யார்?
   A) டாக்டர் பல்பு
   B) சட்டம்பி சுவாமிகள்
   C) தைக்காடு அய்யா
   D) வைகுண்ட சுவாமிகள்

3. 1857-ஆம் ஆண்டின் புரட்சி எங்கு தொடங்கியது?
   A) மீரட்
   B) ஹரியானா
   C) நாக்பூர்
   D) பஞ்சாப்

4. காந்தியடிகளை முதன்முதலில் ‘தேசத் தந்தை’ என்று அழைத்தவர் யார்?
   A) கோபாலகிருஷ்ண கோகலே
   B) சுவாமி விவேகானந்தர்
   C) நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்
   D) இவர்களில் எவரும் இல்லை

5. ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகம் எங்குள்ளது?
   A) நியூயார்க்
   B) நெதர்லாந்து
   C) ஜெனீவா
   D) ஹேக்

6. எண்ணெய் கப்பல் போக்குவரத்துப் பாதைகள் காரணமாக ஈரான்-அமெரிக்கா மோதல்களில் எந்தப் பகுதி முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது?
   A) பனாமா கால்வாய்
   B) சூயஸ் கால்வாய்
   C) ஹார்முஸ் ஜலசந்தி
   D) பெரிங் ஜலசந்தி

7. இந்திய வானிலை ஆய்வுத் துறையின் தலைமையகம் எங்குள்ளது?
   A) டெல்லி
   B) விசாகப்பட்டினம்
   C) ஹைதராபாத்
   D) திருவனந்தபுரம்

8. காற்று மூலம் வெப்பம் கிடைமட்டமாகப் பரவும் செயல்முறை எவ்வாறு அழைக்கப்படுகிறது?
   A) வெப்பப் பரிமாற்றம் (Heat transfer)
   B) வெப்பச்சலனம் (Convection)
   C) வெப்ப நகர்வு (Advection)
   D) வெப்பக் கதிர்வீச்சு (Radiation)

9. வளிமண்டலத்தின் எந்த அடுக்கில் ஓசோன் படலம் அமைந்துள்ளது?
   A) ட்ரோப்போஸ்பியர்
   B) ஸ்டேட்டோஸ்பியர்
   C) மீஷோஸ்பியர்
   D) தெர்மோஸ்பியர்

10. கிருஷ்ணா நதியின் துணை ஆறுகள் எவை?

A) துங்கபத்ரா – பீமா

B) கபனி – பவானி

C) இந்திராவதி – சபரி

D) இப் – டெல்

11. இந்தியாவில் காபி உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் மாநிலம் எது?

A) தமிழ்நாடு

B) கேரளா

C) மகாராஷ்டிரா

D) கர்நாடகா

12. 2026 -ஆம் ஆண்டு 'எல் நினோ' (El Nino) நிகழ்வு நிகழவுள்ள ஆண்டாகும்; ஆனால் இதற்குச் சற்று முன்பு அதே நிகழ்வு எந்த ஆண்டில் ஏற்பட்டது?

A) 2010

B) 2015

C) 2023

D) 2013

13. பசுமைப் புரட்சி தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எவை சரியானவை?

i. பசுமைப் புரட்சி பருப்பு வகைகளின் உற்பத்தியை கணிசமாக அதிகரித்தது.

ii. பசுமைப் புரட்சி இந்தியாவை உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு அடையச் செய்தது.

iii. பசுமைப் புரட்சி முக்கியமாக கோதுமை மற்றும் நெல் உற்பத்தியை அதிகரித்தது.

iv. பசுமைப் புரட்சியின் ஒரு பகுதியாக நீர்ப்பாசனத் திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டன.

A) கூற்றுகள் ii, iii, iv சரியானவை; கூற்று i தவறானது

B) கூற்றுகள் i, iii, iv சரியானவை; கூற்று ii தவறானது

C) கூற்றுகள் i மற்றும் ii சரியானவை; கூற்றுகள் iii மற்றும் iv தவறானவை

D) கூற்றுகள் i மற்றும் iii சரியானவை; கூற்றுகள் ii மற்றும் iv தவறானவை

14. இந்தியாவின் முக்கிய பயிர்கள் மற்றும் அவற்றின் சாகுபடிக்கு ஏற்ற மண்/ நிலப்பரப்பு தொடர்பான சரியான கூற்றுகள் எவை?

i. பருத்தி சாகுபடிக்கு கரிசல் மண் ஏற்றது.

ii. சணல் சாகுபடிக்கு வண்டல் மண் ஏற்றது.

iii. தேயிலை சாகுபடிக்கு மலைப்பாங்கான/சரிவான பகுதிகள் ஏற்றவை.

iv. கோதுமை முக்கியமாக செம்மண் (லேட்டரைட்) வகையைச் சார்ந்த மண்ணில் பயிரிடப்படுகிறது

A) கூற்றுகள் ii, iii, iv சரியானவை; கூற்று i தவறானது

B) கூற்றுகள் i, ii, iii சரியானவை; கூற்று iv தவறானது

C) கூற்றுகள் i, ii சரியானவை; கூற்றுகள் iii, iv தவறானவை

D) கூற்றுகள் i மற்றும் iii சரியானவை; கூற்றுகள் ii மற்றும் iv தவறானவை

15. பின்வரும் இணைகளில் கனிமம் மற்றும் அதன் முக்கிய பயன்பாடு சரியாகப் பொருந்தியுள்ளது எது ?

i. பாக்சைட் – அலுமினியக் கட்டுமானம்

ii. மைக்கா – மின் காப்பான்கள் (insulators) தயாரிப்பு

iii. சுண்ணாம்புக்கல் – உரத் தயாரிப்பு

iv. இரும்புத் தாது – எஃகு கட்டுமானம்

A) i, ii, iii B) ii, iii, iv C) i, iii, iv D) i, ii, iv

16. நிரல் A-ல் உள்ள ஐந்தாண்டுத் திட்டங்களை நிரல் B-ல் உள்ளவற்றுடன் சரியாகப் பொருத்துக. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

| A | B |
|---|---|
| a. முதல் ஐந்தாண்டுத் திட்டம் | 1. மஹலனோபிஸ் மாதிரி |
| b. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் | 2. விவசாய மேம்பாடு |
| c. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் | 3. மனிதவள மேம்பாடு |
| d. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் | 4. வறுமை ஒழிப்பு (Garibi Hatao) |

A) a – 1, b – 2, c – 3, d – 4 B) a – 2, b – 1, c – 3, d – 4

C) a – 2, b – 1, c – 4, d – 3 D) a – 2, b – 4, c – 1, d – 3

17. நிதி ஆயோக் குறித்த பின்வரும் கூற்றுகளில் எது சரியானது ?

1. நிதி ஆயோக் என்பது 2015-ல் நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஒரு அமைப்பாகும்.
2. மாநிலங்களுக்குத் திட்ட நிதியை ஒதுக்கீடு செய்யும் அதிகாரம் நிதி ஆயோக்கிற்கு இல்லை.

A) கூற்று 2 மட்டுமே சரியானது; கூற்று 1 தவறானது

B) கூற்று 1 மட்டுமே சரியானது; கூற்று 2 தவறானது

C) கூற்றுகள் 1 மற்றும் 2 ஆகிய இரண்டும் சரியானவை

D) கூற்றுகள் 1 மற்றும் 2 ஆகிய இரண்டும் தவறானவை

18. இந்தியாவில் பணவியல் கொள்கை (Monetary Policy) குறித்த பின்வரும் கூற்றுகளில் எது சரியானது ?
   i. இந்திய ரிசர்வ் வங்கி (RBI) இந்தியாவில் பணவியல் கொள்கையை வடிவமைத்துச் செயல்படுத்துகிறது.
   ii. பொருளாதார நிலைத்தன்மையை உறுதி செய்வது பணவியல் கொள்கையின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.
   iii. ரெப்போ விகிதம் (Repo Rate), சி.ஆர்.ஆர். (CRR), எஸ்.எல்.ஆர். (SLR) போன்ற கருவிகள் பணவியல் கொள்கையைச் செயல்படுத்த பயன்படுத்தப்படுகின்றன.
   iv. குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) என்பது ஒரு பணவியல் கொள்கைக் கருவியாகும்.

   பின்வருவனவற்றில் எந்தக் கூற்றுகள் சரியானவை ?

   A) கூற்றுகள் ii, iii மற்றும் iv சரியானவை; கூற்று i தவறானது
   B) கூற்றுகள் i, ii மற்றும் iv சரியானவை; கூற்று iii தவறானது
   C) கூற்றுகள் i, ii மற்றும் iii சரியானவை; கூற்று iv தவறானது
   D) கூற்றுகள் i மற்றும் iii சரியானவை; கூற்றுகள் ii மற்றும் iv தவறானவை

19. "மேக் இன் இந்தியா" (Make in India) திட்டத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகள் எவை ?
   i. அந்நிய முதலீட்டை ஈர்த்தல்
   ii. உற்பத்தித் துறையை ஊக்குவித்தல்
   iii. தொழில்துறையில் உரிமம் பெறுவதற்கான தேவைகளை அதிகரித்தல்
   iv. உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்தல்

   A) i, ii, iv   B) i, iii, iv   C) ii, iii, iv   D) i, ii, iii

20. பின்வருவனவற்றை பொருத்துக.

| | A | | B |
|---|---|---|---|
| 1. | 52-வது அரசியலமைப்புத் திருத்தம் | a. | கல்வியை அடிப்படை உரிமையாக்குதல் |
| 2. | 74-வது அரசியலமைப்புத் திருத்தம் | b. | கட்சித் தாவல் தடைச் சட்டம் |
| 3. | 84-வது அரசியலமைப்புத் திருத்தம் | c. | நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசியலமைப்பு அந்தஸ்து அளித்தல் |
| 4. | 91-வது அரசியலமைப்புத் திருத்தம் | d. | அமைச்சரவையில் அமைச்சர்களின் எண்ணிக்கையை வரையறுத்தல் |

   A) 1 – c, 2 – d, 3 – b, 4 – a   B) 1 – b, 2 – c, 3 – a, 4 – d
   C) 1 – a, 2 – c, 3 – b, 4 – d   D) 1 – d, 2 – b, 3 – a, 4 – c

21. இந்திய அரசியலமைப்பின் கீழ் உள்ள 'எஞ்சிய அதிகாரங்கள்' (Residuary Powers) தொடர்பான பின்வரும் கூற்றுகளில் தவறானவை எவை?

I. இணையச் சட்டங்கள் (Cyber laws) எஞ்சிய அதிகாரங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

II. செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) எஞ்சிய அதிகாரங்களின் கீழ் சேர்க்கப்படவில்லை.

III. இந்தியா இதன் அம்சங்களை கனடா அரசியலமைப்பிலிருந்து பெற்றது.

IV. இது குறித்துச் சட்டங்களை இயற்றும் அதிகாரம் மத்திய அரசுக்கு உள்ளது.

A) I  B) II  C) III  D) IV

22. இந்திய அரசியலமைப்பின் 148-வது பிரிவு எதனுடன் தொடர்புடையது?

A) பிரதமர்

B) துணைப் பிரதமர்

C) துணை ஜனாதிபதி

D) தலைமைத் தணிக்கையாளர் (CAG)

23. பின்வருவனவற்றைப் பொருத்துக (அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைகள்).

| | A | | B |
|---|---|---|---|
| 1. | பிரிவு 40 | a. | பசுவதை தடுப்பு |
| 2. | பிரிவு 43 | b. | பொது சிவில் சட்டம் |
| 3. | பிரிவு 44 | c. | கிராம பஞ்சாயத்துகள் |
| 4. | பிரிவு 48 | d. | குடிசைத் தொழில்கள் |

A) 1 – b, 2 – c, 3 – d, 4 – a  B) 1 – c, 2 – a, 3 – b, 4 – d

C) 1 – c, 2 – d, 3 – b, 4 – a  D) 1 – d, 2 – c, 3 – b, 4 – a

24. இந்திய அரசியலமைப்பின் முகவுரையை "அரசியலமைப்பின் ஜாதகம்" என்று வர்ணித்தவர் யார்?

A) ஜவஹர்லால் நேரு  B) கே. எம். முன்ஷி

C) என். ஏ. பால்கிவாலா  D) பண்டிட் தாக்கூர் தாஸ்

25. இந்தியாவில் இளைஞர்களால் வழிநடத்தப்படும் இயக்கமான CJP-யின் விரிவாக்கம் என்ன?

A) காக்ரோஜ் ஜனசங் பார்ட்டி
B) காக்ரோஜ் ஜெயசங் பார்ட்டி
C) காக்ரோஜ் ஜனதா பார்ட்டி
D) மேற்கூறிய எதுவும் இல்லை

26. கேரள சட்டமன்றத்தின் தற்போதைய துணை சபாநாயகர் யார்?

A) ஷானிமோல் உஸ்மான்
B) திருவஞ்சூர் ராதாகிருஷ்ணன்
C) சிட்டயம் கோபகுமார்
D) கே. ஏ. துளசி

27. கேரளத்தில் மூத்த குடிமக்களுக்கு இலவசமாக வீட்டிலேயே மருத்துவ சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்கும் திட்டம் எது ?

A) ஸ்னேஹபூர்வம்
B) வயோமித்ரம்
C) சுக்ருதாலயம்
D) சாந்த்வனம்

28. தாய்மார்கள் மற்றும் குழந்தைகளிடையே ஊட்டச்சத்துக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்காக பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையால் தொடங்கப்பட்ட திட்டம் எது?

A) போஷன் அபியான்
B) சம்புஷ்ட கேரளா
C) அம்ருதம் ஆரோக்கியம்
D) க்ஷீரதாரா

29. சதுப்பு நிலங்களைப் பாதுகாப்பது தொடர்பான சர்வதேச ஒப்பந்தம் எது ?

A) ஜெனீவா ஒப்பந்தம்
B) ராம்சர் ஒப்பந்தம்
C) பாரிஸ் ஒப்பந்தம்
D) வியன்னா ஒப்பந்தம்

30. கேரளாவில் ‘சமூக ஆற்றல் சேமிப்பு மாதிரி’ (Community Energy Storage Model) என்பதற்கான முன்னோடித் திட்டத்தை முதலில் செயல்படுத்திய ஊராட்சி எது?

A) பெரிங்கம்
B) புத்தனங்காடி
C) பெரிஞ்சனம்
D) குமரகம்

31. NDRF-ன் விரிவாக்கத்தை எழுதுக.

A) National Disaster Relief Fund

B) National Disaster Response Force

C) National Disaster and Relief Force

D) National Disater Research Forum

32. பின்வருவனவற்றுள் தவறான கூற்று எது ?

A) மாநிலத் தேர்தல் ஆணையம் ஒரு சுதந்திரமான அரசியலமைப்பு சார்ந்த அமைப்பாகும்.

B) லோக் ஆயுக்தா ஊழல் தொடர்பான புகார்களை விசாரிக்கிறது.

C) மாநில மனித உரிமைகள் ஆணையம் ஒரு உரிமையியல் நீதிமன்றத்தின் (civil court) அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

D) நிதி ஆயோக் (NITI Aayog) ஒரு அரசியலமைப்பு சார்ந்த அமைப்பாகும்.

33. நிலம் தொடர்பான சேவைகளை அதிக வெளிப்படைத் தன்மையுடன் வழங்கவும், மோசடியான நில ஆவணங்களைத் தடுக்கவும் 'என்டே பூமி போர்டல்' மூலம் எந்தத் தொழில்நுட்பப் பாதுகாப்பு அமைப்பு பயன்படுத்தப்படுகிறது ?

A) பிளாக்செயின்

B) செயற்கை நுண்ணறிவு

C) பயோமெட்ரிக் லேண்ட் லாக்கிங்

D) குவாண்டம் கிரிப்டோகிராபி

34. கேரளாவின் சுகாதாரத் துறையில் செயல்படுத்தப்படும் 'ஆர்த்ரம் மிஷன்' இன் முக்கிய நோக்கம் என்ன ?

A) ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிகிச்சை வசதிகளை விரிவுபடுத்துதல்

B) ஆரம்ப சுகாதார நிலையங்களை குடும்ப சுகாதார நிலையங்களாக மாற்றுதல்

C) சிகிச்சையை முற்றிலும் இலவசமாக்குதல்

D) ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிறப்பு மருத்துவர்களின் சேவையை உறுதி செய்தல்

35. பின்வரும் கூற்றுகளில் எது/எவை சரியானவை?

i. சில ஆன்டிபாடிகள் பாக்டீரியாக்களின் செல் சவ்வுகளைச் சிதைப்பதன் மூலம் அவற்றை அழிக்கின்றன.

ii. ஆன்டிபாடிகள் ஆன்டிஜென்களின் நச்சுத்தன்மையைச் செயலிழக்கச் செய்கின்றன.

iii. ஆன்டிபாடிகள் வெள்ளை இரத்த அணுக்களைத் தூண்டாமலே நோய்க் கிருமிகளை அழிக்கின்றன.

A) i, ii மட்டும்
B) i, iii மட்டும்
C) ii, iii மட்டும்
D) i, ii, iii ஆகிய மூன்றும்

36. செயற்கை நோய் எதிர்ப்பு சக்தியை (artificial immunization) உருவாக்கு -வதற்கான தடுப்பூசிகளைத் தயாரிக்கப் பின்வருவனவற்றுள் எது பயன்படுத்தப்படுவதில்லை?

A) உயிருள்ள நோய்க்கிருமிகள்
B) செயலற்றதாக்கப்பட்ட நோய்க்கிருமிகள்
C) நச்சுநீக்கம் செய்யப்பட்ட நச்சுப்பொருட்கள்
D) நோயாளியின் உடல் செல்கள்

37. மனித மூளையின் மின் அலைகளைப் பதிவு செய்யப் பயன்படும் கருவி எது?

A) அல்ட்ராசவுண்ட் ஸ்கேனர்
B) எலக்ட்ரோஎன்செபலோகிராம் (EEG)
C) CT ஸ்கேனர்
D) MRI ஸ்கேனர்

38. பின்வருவனவற்றுள் மிகவும் ஆபத்தான வைரஸ் நோய் எது?

A) எய்ட்ஸ்
B) நிபா வைரஸ் நோய்
C) கோவிட்-19
D) ரைனோவைரஸ் நோய்

39. மனித உடலில் உள்ள எலும்புகளைப் பாதுகாத்து அவற்றைச் சூழ்ந்திருக்கும் உறை எது?

A) பெரிகார்டியம்
B) மெனிஞ்சஸ்
C) பெரியோஸ்டியம்
D) ப்ளூரா

40. பின்வருவனவற்றுள் எந்த இரத்த அழுத்த அளவு 'உயர் இரத்த அழுத்தம்' எனக் கருதப்படுகிறது ?

A) 90/60 mm Hg
B) 120/80 mm Hg
C) 150/95 mm Hg
D) 110/75 mm Hg

41. பசுமை இல்ல வாயுக்கள் (greenhouse gases) குறித்த பின்வரும் கூற்றுகளில் எது தவறானது ?

A) பசுமை இல்ல வாயுக்கள் வளிமண்டலத்தின் வெப்பநிலையை அதிகரிக்கின்றன
B) கார்பன் டை ஆக்சைடு, மீத்தேன் மற்றும் நைட்ரஸ் ஆக்சைடு ஆகியவை முக்கிய பசுமை இல்ல வாயுக்கள் ஆகும்
C) பசுமை இல்ல வாயுக்களின் அளவு அதிகரிப்பது புவி வெப்பமடைதலுக்குக் காரணமாகிறது
D) நைட்ரஜன் மற்றும் ஆக்சிஜன் ஆகியவை முக்கிய பசுமை இல்ல வாயுக்கள் ஆகும்

42. சமீபத்தில் செய்திகளில் இடம்பெற்ற 'அகமன்' (Aagaman) திட்டம் குறித்த பின்வரும் கூற்றுகளில் எது சரியானது ?

A) காலநிலை மாற்றத்தை ஆய்வு செய்வதற்காக இஸ்ரோ (ISRO) உருவாக்கிய ராக்கெட்டை ஏவுதல்.
B) இந்திய தனியார் துறை ஸ்டார்ட்-அப் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட ராக்கெட்டின் முதல் ஏவுதல்.
C) வெள்ளி (Venus) கிரகத்திற்கான இஸ்ரோவின் முதல் ஆய்வுத் திட்டம்
D) விண்வெளி குப்பைகளை (Space Debris) அகற்றுவதற்காக இஸ்ரோ மற்றும் நாசா இணைந்து மேற்கொண்ட திட்டம்.

43. நீளத்தின் பல்வேறு அலகுகள் அவற்றின் மதிப்புகளின் ஏறுவரிசையில் அமைக்கப்பட்டுள்ளன. சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்.

A) மில்லிமீட்டர், கிலோமீட்டர், ஒளி ஆண்டு
B) ஒளி ஆண்டு, கிலோமீட்டர், மில்லிமீட்டர்
C) கிலோமீட்டர், மில்லிமீட்டர், ஒளி ஆண்டு
D) மில்லிமீட்டர், ஒளி ஆண்டு, கிலோமீட்டர்

44. ஒளியிழை (optical fiber) தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொண்டு அதற்கேற்ப பதிலளிக்கவும்.

a. இவை முழு அக எதிரொளிப்பு (Total internal reflection) தத்துவத்தின் அடிப்படையில் செயல்படுகின்றன.

b. இவை மருத்துவத் துறையில் எண்டோஸ்கோபி (Endoscopy) செய்யப் பயன்படுகின்றன.

c. இவற்றின் வழியாக சிக்னல்கள் ஒலியின் வேகத்தில் பயணிக்கின்றன.

A) a – சரி, b – தவறு, c – சரி

B) a – சரி, b – தவறு, c – தவறு

C) a – சரி, b – சரி, c – தவறு

D) அனைத்தும் சரி

45. மருத்துவமனைகள் மற்றும் பொது இடங்களில், உடல் தொடர்பின்றி உடல் வெப்பநிலையை விரைவாக அளவிட எந்தக் கருவி பயன்படுத்தப்படுகிறது?

A) கலிலியோ வெப்பமானி

B) ஆய்வக வெப்பமானி

C) மாறாக் கனஅளவு வாயு வெப்பமானி

D) அகச்சிவப்பு வெப்பமானி

46. புவிஈர்ப்பு முடுக்கம் (g)தொடர்பான பின்வரும் கூற்றுகளை ஆராய்க.

i. புவியின் மேற்பரப்பில் ‘g’-இன் தோராயமான மதிப்பு 9.8 $m/s^2$ ஆகும்.

ii. நிலநடுக் கோட்டிலிருந்து துருவங்களை நோக்கிச் செல்லும்போது ‘g’-இன் மதிப்பு குறைகிறது.

iii. புவியின் மேற்பரப்பிலிருந்து ஆழத்திற்குச் செல்லும்போது ‘g’-இன் மதிப்பு குறைகிறது.

iv. புவியின் மையத்தில் ‘g’-இன் மதிப்பு பூஜ்ஜியமாகும்.

மேற்கூறியவற்றில் எவை சரியானவை?

A) i, ii

B) ii, iii, iv

C) i, iii, iv

D) அனைத்தும் சரியானவை

47. துருப்பிடிக்காத எஃகு (stainless steel) என்ற உலோகக் கலவையில் உள்ள கூறுகள் யாவை?

A) Fe, Mn, C
B) Fe, Si, C
C) Fe, Cr, Ni, C
D) Fe, C

48. ஒரு வாயுவில் உள்ள துகள்களின் எண்ணிக்கைக்கும் அதன் கனஅளவுக்கும் இடையிலான தொடர்பை விளக்கும் விதி எது?

A) சார்லஸ் விதி
B) பாயில் விதி
C) அவகாட்ரோ விதி
D) நியூட்டன் விதி

49. $H_3PO_4$ (பாஸ்பாரிக் அமிலம்) இன் காரத்தன்மை (basicity) என்ன?

A) 1
B) 2
C) 3
D) 4

50. தனிம வரிசை அட்டவணையில் உள்ள ஓகனசன் (Og) தனிமத்தின் அணு எண் என்ன?

A) 115
B) 116
C) 117
D) 118

51. வேதியியலுக்கான 2025-ஆம் ஆண்டின் நோபல் பரிசு பின்வருவனவற்றுள் எந்தக் கண்டுபிடிப்பின் உருவாக்கத்திற்காக வழங்கப்பட்டது?

A) CRISPR மரபணுத் திருத்தத் தொழில்நுட்பம்
B) உலோக-கரிமக் கட்டமைப்புகள் (MOFs)
C) லித்தியம்-அயனி மின்கலன்கள்
D) பசுமை ஒளிரும் புரதம் (GFP)

52. கேரள கலாமண்டலம் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எவை சரியானவை?

i. இது 2007 -இல் நிகர்நிலைப் பல்கலைக்கழகமாக (Deemed-to-be University) மாறியது.
ii. 1975-இல் இது அரசு உதவி பெறும் கல்வி நிறுவனமாக மாறியது.
iii. இது 1930-இல் நிறுவப்பட்டது.

A) i மட்டும் சரி
B) ii மற்றும் iii மட்டும் சரி
C) i மற்றும் iii மட்டும் சரி
D) i, ii மற்றும் iii ஆகியவை சரி

53. பின்வருவனவற்றுள் மணிப்பிரவாள வகையைச் சாராத படைப்பு எது?

A) உன்னியச்சி
B) உன்னிசிருதேவி
C) ராமசரிதம்
D) செரியச்சி

54. கடம்மனிட்ட ராமகிருஷ்ணனின் 'கிராதவிருத்தம்' என்ற கவிதையை எந்தக் கலை வடிவம் பாதித்தது?

A) ஒட்டன் துள்ளல்
B) கதகளி
C) கூடியாட்டம்
D) படயணி

55. போரில் கிடைத்த வெற்றியைக் கொண்டாடும் வகையில் சித்தூர் பகவதி காவுவில் எந்தத் திருவிழா நடத்தப்படுகிறது?

A) கொங்கன் படா
B) பூரக்களி
C) நவராத்திரி
D) மாமாங்கம்

56. "நமிகிலுயராம், நடுகில்தின்னாம், நல்குகில் நெடிடாம்;
நமுக்குநாமே பணிவதுநாகம் நகரவுமதுபோலே" – என்ற வரிகள் எந்தக் கவிதையிலிருந்து எடுக்கப்பட்டவை?

A) விஸ்வதர்சனம்
B) பிரேம சங்கீதம்
C) காவிலே பாட்டு
D) கன்னிக்கொய்து

57. 2026 ஃபிஃபா (FIFA) உலகக் கோப்பை இறுதிப் போட்டியை நடுவராக வழிநடத்தியவர் யார்?

A) பெனிட்டோ ஆர்ச்சுண்டியா
B) ஜார்ஜ் லாரியோண்டா
C) ஸ்லாவ்கோ வின்சிச்
D) லுபோஸ் மிசேல்

58. 72-வது தேசிய திரைப்பட விருதுகள் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது தவறானது?

A) 2024-இல் வெளியான திரைப்படங்களுக்கு இவ்விருதுகள் வழங்கப்பட்டன.

B) சிறந்த முழுநீளத் திரைப்படத்திற்கான விருது 'ஆர்டிகிள் 370' படத்திற்கு வழங்கப்பட்டது.

C) முழுநீளத் திரைப்பட நடுவர் குழுவின் தலைவராக திரு. அசீம் சின்ஹா இருந்தார்.

D) சிறந்த மலையாளத் திரைப்படம் – ஃபெமினிச்சி ஃபாத்திமா.

59. நவீன செயலிகளில் (processors) அதன் அதிக வேகம் காரணமாக பொதுவாக எந்த வகையான நினைவகம் 'கேச்' (cache) நினைவகமாகப் பயன்படுத்தப்படுகிறது ?

A) DRAM B) SRAM C) ROM D) EEPROM

60. ஒரு நிரல் (program) பின்வரும் கட்டளைகளைச் செயல்படுத்துகிறது.

```
INPUT N
IF N > 0 GOTO L1
PRINT "NEGATIVE"
STOP
 L1:
IF N < 100 GOTO L2
PRINT "LARGE"
STOP
L2:
PRINT "SMALL POSITIVE"
STOP
```

N-இன் உள்ளீட்டு மதிப்பு 120 ஆக இருந்தால், எந்தக் கூற்று சரியானது ?

A) NEGATIVE B) SMALL POSITIVE

C) LARGE D) வெளியீடு இல்லை (No output)

61. இணையத் தாக்குதல்களை (cyber-attacks) அவற்றின் பண்புகளுடன் பொருத்துக.

| தாக்குதல்கள் | | பண்புகள் |
|---|---|---|
| 1. ஃபிஷிங் (Phishing) | a. | நெட்வொர்க் பாக்கெட்டுகளைக் கைப்பற்றுதல் |
| 2. ஸ்பூஃபிங் (Spoofing) | b. | போலி மின்னஞ்சல்கள் அல்லது இணைய தளங்கள் |
| 3. ஸ்னிஃபிங் (Sniffing) | c. | ரகசியத் தகவல்களை நேரடியாகக் கவனித்தல் |
| 4. ஷோல்டர் சர்ஃபிங் (Shoulder surfing) | d. | நம்பகமான அடையாளத்தைப் போல நடித்தல் |

சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

A) 1 – b, 2 – d, 3 – a, 4 – c B) 1 – d, 2 – b, 3 – c, 4 – a

C) 1 – a, 2 – c, 3 – d, 4 – b D) 1 – c, 2 – a, 3 – b, 4 – d

62. கூகுளின் தானியங்கி கார் (self-driving car) திட்டம் தற்போது எந்த நிறுவனத்தால் இயக்கப்படுகிறது ?

A) Tesla
B) Waymo
C) NVIDIA
D) Cruise

63. 'கிளாட்' (Claude) என்பது எந்த நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட ஒரு 'ஜெனரேட்டிவ் AI' (generative AI) உதவியாளர் ஆகும் ?

A) Google
B) Microsoft
C) Anthropic
D) OpenAI

64. மத்திய தகவல் ஆணையம் (Central Information Commission) எப்போது நடைமுறைக்கு வந்தது ?

A) அக்டோபர் 15, 2005
B) ஜூன் 15, 2005
C) அக்டோபர் 12, 2005
D) ஜூன் 12, 2005

65. POCSO சட்டத்தின் கீழ், ஒரு நபர் பாலியல் நோக்கத்துடன் ஒரு குழந்தையின் தனிப்பட்ட உறுப்புகளைத் தொட்டாலோ அல்லது அக்குழந்தையைத் தங்கள் தனிப்பட்ட உறுப்புகளைத் தொடத் தூண்டினாலோ அது எந்தக் குற்றமாகக் கருதப்படுகிறது ?

A) பாலியல் துன்புறுத்தல்
B) பாலியல் தாக்குதல்
C) ஊடுருவலுடன் கூடிய பாலியல் தாக்குதல்
D) தீவிர ஊடுருவலுடன் கூடிய பாலியல் தாக்குதல்

66. 'பெற்றோர் மற்றும் முதியோர் பாதுகாப்பு மற்றும் நலச் சட்டம், 2007'-இன் படி 'மூத்த குடிமகன்' (senior citizen) என்பது யாரைக் குறிக்கிறது ?

A) இந்தியக் குடிமகனாகவும், அறுபத்தைந்து வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராகவும் உள்ள நபர்.
B) இந்தியக் குடிமகன் அல்லாதவராகவும், அறுபது வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராகவும் உள்ள நபர்.
C) இந்தியக் குடிமகனாகவும், அறுபது வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராகவும் உள்ள நபர்.
D) இந்தியக் குடிமகனாகவும், அறுபது வயது அல்லது அதற்குக் குறைவான வயதுடையவராகவும் உள்ள நபர்.

67. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நுகர்வோருக்கு எத்தனை உரிமைகள் உள்ளன?

A) 4
B) 6
C) 5
D) 7

68. குடும்ப வன்முறைச் சட்டத்தின் பிரிவு 18-ன் கீழ் யார் தடை உத்தரவுகளைப் பிறப்பிக்கலாம்?

A) உதவி ஆய்வாளர்
B) காவல் ஆய்வாளர்
C) பஞ்சாயத்துத் தலைவர்
D) நீதித்துறை நடுவர்

69. கேரளாவின் தற்போதைய தலைமைத் தகவல் ஆணையர் யார்?

A) வி. ஹரி நாயர்
B) பாலட் மோகன்தாஸ்
C) விஸ்வாஸ் மேத்தா
D) பார்த்தா பிஸ்வாஸ்

70. 16-வது கேரள சட்டமன்றத்தில் பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத்துறை அமைச்சர் யார்?

A) பாலட் மோகன்தாஸ்
B) விஸ்வாஸ் மேத்தா
C) பார்த்தா பிஸ்வாஸ்
D) கே. ஏ. துளசி

71. $5^{3x-1} \div 25 = 125$ எனில், 'x'-ன் மதிப்பு என்ன?

A) 2
B) 3
C) 1
D) 4

72. $11^3 + 12^3 + 13^3 + .... + 25^3$ ஆகியவற்றின் கூட்டுத்தொகையைக் காண்க.

A) 102100
B) 103600
C) 101600
D) 102600

73. பின்வரும் தொடரில் விடுபட்ட எண்ணைக் காண்க.

13, 14, 23, 48, 97, 178, ?

A) 259
B) 278
C) 269
D) 299

74. எழுத்துக்களை அவற்றின் சரியான வரிசையில் மாற்றி அமைத்து, பொருந்தாத ஒன்றைக் கண்டறியவும்.

A) TOGA
B) GEPONI
C) RARPOT
D) LEEGA

75. ஆகஸ்ட் 15, 2026 ஒரு சனிக்கிழமை என்றால், ஆகஸ்ட் 15, 2030 வாரத்தின் எந்த நாளாக இருக்கும்?

A) சனிக்கிழமை
B) வியாழக்கிழமை
C) திங்கட்கிழமை
D) வெள்ளிக்கிழமை

76. இரண்டு எண்கள் முறையே மூன்றாவது எண்ணை விட 20% மற்றும் 50% அதிகமாக இருந்தால், அந்த இரண்டு எண்களுக்கும் இடையிலான விகிதம் என்ன?

A) 2 : 5
B) 6 : 7
C) 3 : 5
D) 4 : 5

77. ராஜு கிழக்கு நோக்கி 4 கி.மீ. நடக்கிறார். பின்னர் அவர் இடதுபுறம் திரும்பி மேலும் 3 கி.மீ. நடக்கிறார். அவர் தனது தொடக்கப் புள்ளியிலிருந்து எந்த திசையில், எவ்வளவு தொலைவில் உள்ளார்?

A) தென்-மேற்கு, 5 கி.மீ.
B) வட-கிழக்கு, 5 கி.மீ.
C) தென்-கிழக்கு, 5 கி.மீ.
D) வட-மேற்கு, 5 கி.மீ.

78. 21 செ.மீ. நீளமும் 8 செ.மீ. வெளி விட்டமும் கொண்ட ஒரு உள்ளீடற்ற இரும்புக்குழாய் உள்ளது. குழாயின் தடிமன் 1 செ.மீ. மற்றும் 1 கன செ.மீ. ($cm^3$) அளவுடைய இரும்பின் எடை 8 கிராம் ஆகும். குழாயின் மொத்த எடை என்ன?

A) 3.6 கி.கி.
B) 36 கி.கி.
C) 3.696 கி.கி.
D) 36.9 கி.கி.

79. A ஒரு வேலையைத் தனியாக 6 நாட்களிலும், B அதே வேலையைத் தனியாக 8 நாட்களிலும் முடிக்க முடியும். A மற்றும் B ஆகியோர் ரூபாய் 3,200-க்கு அந்த வேலையை முடிக்க ஒப்புக்கொண்டனர். C-யின் உதவியுடன், அவர்கள் வேலையை 3 நாட்களில் முடித்தனர். C-க்கு எவ்வளவு பணம் வழங்கப்பட வேண்டும்?

A) 375
B) 400
C) 600
D) 800

80. A+B என்பது A என்பவர் B யின் சகோதரி என்பதைக் குறிக்கிறது. A@B என்பது A என்பவர் B யின் மனைவி என்பதைக் குறிக்கிறது. A#B என்பது A என்பவர் B யின் மகன் என்பதைக் குறிக்கிறது. A%B என்பது A என்பவர் B யின் தாய் என்பதைக் குறிக்கிறது.

'P@Q#R%S+O' என்ற கோவையில் S மற்றும் P க்கு இடையிலான உறவு என்ன?

A) சகோதரி
B) நாத்தனார்
C) சகோதரன்
D) தாய்

81. The District Collector ____________ the strike after a successful negotiation with the union leaders.

A) called at
B) called off
C) called for
D) called on

82. One should learn to love

A) himself
B) herself
C) oneself
D) themselves

83. Choose the correct plural form of the word 'Crisis'.

A) Crisises
B) Crisis
C) Crises
D) Crisies

84. Add the correct question tag.
He hardly ever completes his work on time, ______ ?

A) doesn't he ?
B) does he ?
C) is he ?
D) isn't he ?

85. Choose the synonyms of the word 'mundane'.

i. ordinary ii. prosaic iii. earthly iv. noble

A) i only
B) i, iii and iv
C) i, ii and iii
D) All the above

86. A statement of Assertion (A) is followed by a statement of Reason (R). Choose the correct option.

**Assertion (A)** : The passive voice of the command, "Close the door" is, "Let the door be closed."

**Reason (R)** : When changing an imperative sentence containing an object into passive voice the sentence begins with 'Let', followed by the object and be + past participle.

A) Both (A) and (R) are true and (R) is the correct explanation of (A)
B) Both (A) and (R) are true but (R) is not the correct explanation of (A)
C) (A) is true but (R) is false
D) (A) is false but (R) is true

87. Find the correctly spelt word.

A) ENTREPRANEUR

B) ENTRAPRENEUR

C) ENTREPRENEUR

D) ENTREPRENUER

88. In which of the following sentences is the word ‘Object’ used as a verb ?

A) The mystery object was found in the attic.

B) I have no object in mind but to help you.

C) Many citizens object the new tax laws.

D) The teacher placed an object on the table.

89. The correct meaning of déjà vu is

A) A sudden fear

B) A feeling of having experienced something before

C) A forgotten memory

D) A dreamlike illusion

90. Fill in the blanks using the most appropriate articles.

The candidate is ________________ university graduate with ________ honest character.

A) a, a

B) an, a

C) a, an

D) an, an

91. பேரிடர் – பொருள் தருக.

A) பெருமை
B) வலிமை
C) இன்பம்
D) பெருந்துன்பம்

92. ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு – என்று கூறும் நூல்

A) அகநானூறு
B) புறநானூறு
C) திருக்குறள்
D) நாலடியார்

93. பொருத்துக.

கழனி – மூங்கில்
காணி – வயல்
கலி – நில அளவு
கழை – வறுமை

A) கழனி – வயல்
காணி – நில அளவு
கலி – வறுமை
கழை – மூங்கில்

B) கழனி – வறுமை
காணி – மூங்கில்
கலி – நில அளவு
கழை – வயல்

C) கழனி – மூங்கில்
காணி – வறுமை
கலி – வயல்
கழை – நில அளவு

D) கழனி – நில அளவு
காணி – வயல்
கலி – மூங்கில்
கழை – வறுமை

94. எதிர்ச்சொல் எழுது – சேமம்

A) துன்பம்
B) இன்பம்
C) காவல்
D) அழகு

95. "வேழம்" என்பதின் பெண்பால்

A) களிறு
B) பிடி
C) ஆனை
D) களபம்

96. செந்நிலம் – பிரித்து எழுதுக.

A) சிவப்பு + நிலம்

B) செ + ந்நிலம்

C) செம் + நிலம்

D) செம்மை + நிலம்

97. கீழ்காணும் ஆங்கிலச் சொல்லை தமிழில் மொழி பெயர்க்க.
DEMONSTRATION (டெமோன்ஸ்ட்ரேஷன்)

A) செயல்

B) செயல்முறை விளக்கம்

C) செய்முறை

D) செய்தல்

98. கலைந்திருக்கும் சொற்களை இணைத்து வாக்கியம் அமைக்கவும்.

A) சுற்றுலா திருவிழாக்கள் முக்கிய வகிக்கின்றன வளர்ச்சியில் பங்கு

B) திருவிழாக்கள் சுற்றுலா முக்கிய பங்கு வளர்ச்சியில் வகிக்கின்றன

C) சுற்றுலா வளர்ச்சியில் திருவிழாக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன

D) முக்கிய பங்கு திருவிழாக்கள் வளர்ச்சியில் வகிக்கின்றன சுற்றுலா

99. சேர்த்தெழுது – செம்மை + பொன்

A) செம்பொன்

B) சிவந்தபொன்

C) செம்மைபொன்

D) செப்பொன்

100. காலத்தில் பயிர் செய்தால் _________ வாங்க வேண்டாம்.

A) பொருள்

B) உணவு

C) மனை

D) கடன்

## Space for Rough Work